# சமரச விழிப்புணர்வு

## சமரசம் என்றால் என்ன மற்றும் அதன் நோக்கம் என்ன?

சமரசம் என்பது தன்னிச்சையான, தரப்பினரை மையமாகக் கொண்ட பேச்சுவார்த்தை செயல்முறையாகும். இதில் ''சமரசர்'' எனும் ஒரு நடுநிலையான மூன்றாம் நபர், சிறந்த தகவல் பரிமாற்றம் மற்றும் பேச்சுவார்த்தை முறைகளைப் பயன்படுத்தி, தரப்பினர்கள் தங்கள் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள உதவுகிறார். தீர்வுகாண வேண்டுமா என்பதையும், தீர்வின் நிபந்தனைகளையும் தரப்பினர்களே தீர்மானிக்கிறார்கள். அந்த முடிவு சமரசருடையது அல்ல, தீர்வின் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தரப்பினர்கள் மற்றும் சமரசர் கையொப்பம் இட்டவுடன், அவை நீதிமன்ற உத்தரவைப் போல கட்டுப்படுத்தும் தன்மையுடனும் மற்றும் செயல்படுத்தத்தக்க வகையிலும் இருக்கும். சமரசமானது, சாட்சியச் சட்ட விதிகள் அல்லது நடைமுறை விதிகளுக்குக் கட்டுப்பட்டது அல்ல. இந்த கலந்துரையாடல்கள் இரகசியமானவை, பாதகமற்றவை மற்றும் இவற்றை நீதிமன்றங்களில் பயன்படுத்த இயலாது.

சமரசத்தில் தீர்வு எட்டப்படவில்லை எனில், தரப்பினர் மீண்டும் நீதிமன்றங்களையோ அல்லது இசைவுத் தீர்வு நடுவரையோ எப்போது வேண்டுமானாலும் நாடலாம்.

## சமரசத்தை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்?

- ❖ எந்த பிரச்சனைகளை தீர்க்க வேண்டும், என்ன தீர்வு வேண்டும் என்ற இரண்டும், அதாவது கருப்பொருளும், தீர்வும் ஆகிய இரண்டுமே வழக்கு தரப்பினரின் முழு உரிமையில் உள்ளதால் இது அவர்களுக்கான ஒன்று.
- ❖ தரப்பினர்களுக்கு தங்கள் வாயாலே தங்கள் பிரச்சனை என்ன, தீர்வு என்ன என விவாதிக்க ஒரு வாய்ப்பு.
- ❖ சமரசப் பேச்சுவார்த்தை அவர்கள் விருப்பம் சார்ந்தது. எது ஒன்றும் அவர்கள் மீது திணிக்கப்பட மாட்டாது.
- ❖ சமரசம் விரைவானது, திறம்வாய்ந்தது, சிக்கனமானது.
- ❖ சமரசம் எளிதானது, வளைந்து கொடுக்கக்கூடியது. தரப்பினர் தேவைக்கேற்ப நிகழ்முறை முதலியவையை மாற்றிக்கொள்ளலாம்.
- ❖ சமரசம் சாதாரணமான, இயல்பான, சுமூகமான, முறைமைகளின் கெடுபிடி இல்லாத சூழலில் நடைபெறும்.
- ❖ சமரசம் நியாயமானது. சமரசர் எந்த தருணத்திலும், இருதரப்பினருக்கும் பொதுவாக, நடுநிலையாக செயல்படுவதால் பேச்சுவார்த்தை முடிவில் உறவுகள் பாதிக்கப்படாது.
- ❖ சமரசத்தில் ரகசியம் காக்கப்படும்.
- ❖ சமரசத்தில் நேரடி பேச்சாலும், நுணுக்கமான முறைகளாலும், தகவல் பரிமாற்றம் மேம்படும்.
- ❖ மனிதர்களுக்கு உறவுகள் நீடிக்க, மீள்துளிர்க்க, மேம்பட உதவுகிறது.
- ❖ எதிர்காலத்தையும் நீண்டகால நலன்களையும் கருத்தில் கொள்கிறது சமரசம். இதனால் முழு தீர்வு எட்டப்படுகிறது.
- ❖ இருதரப்பினருக்கும் நன்மை நிகழ்கின்றது.
- ❖ ஒரே முயற்சியில் பல வழக்குகள் பிரச்சனைகள் முடிவு காணப்படுகிறது.
- ❖ தீர்வுகள் தனித்தன்மையுடன் அவர்களால் படைக்கப்பட்டதாகவும், ஏற்புடையதாகவும் இருக்கும்.
- ❖ அவர்களே புரிந்து, பின்னர் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்வதால் தீர்வை ஏற்று நடப்பர்.
- ❖ பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு தரப்பினர் முரணிலிருந்து விடுபடுகின்றனர்.
- ❖ நீதிமன்ற கட்டணமும் முழுமையாக திரும்ப அளிக்கப்படுகிறது.

## சமரசச் செயல்முறைக்கான படிநிலைகள்

**நிலை 1**

நீதிமன்றம் வழக்கை சமரசத்திற்கு அனுப்பியவுடன் முதலில் அறிமுகமும், துவக்க உரையும் நடைபெறும். அதாவது, சமரசர் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட பிறகு, வழக்குத் தரப்பினர்களும் தங்களை யார் என்று அறிமுகப்படுத்திக்கொண்ட பின், சமரசம், தன்னிச்சையான மற்றும் ரகசிய தன்மையையும், உடன்படிக்கையின் நிபந்தனைகள் தரப்பினர் மீது சமரசரால் திணிக்கப்பட இயலாது என்பதையும், ஆனால் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு கையொப்பமிடப்பட்டவுடன் அது சட்டப்படி தரப்பினரை கட்டுப்படுத்தும் என்பதையும் உள்ளடக்கிய சமரச செயல்முறையை அனைவருக்கும் புரிந்த மொழியில் சமரசர் விளக்குவார்.

## நிலை 2

அதனைத் தொடர்ந்து, வழக்குத் தரப்பினர்களின் நேரடி மோதலைத் தவிர்க்க சமரசர், இருதரப்பினர்களோடும் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்துவார். இது பிரச்சனையின் ஆழத்தை அறியவும், தனிப்பட்ட உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும், எதிர் தரப்பினர் அறிய வேண்டாம் என நினைக்கும் ரகசியத் தரவுகளை பகிரவும், தரப்பினர்களைத் தீர்வை நோக்கி செலுத்தவும், புதிய தீர்வு வழிமுறைகளைப் பற்றி யோசித்து அறிய வைக்கவும் உதவும். பிறகு இருதரப்பினர்களுடனான கூட்டுப் பேச்சுவார்த்தை நடைபெறும்போது தரப்பினர்கள் நேரடியாக தங்களுடைய கருத்தை, எண்ணத்தை, உணர்வுகளைப் பற்றி பேசலாம்.

## நிலை 3

சமரசர், தரப்பினர்களின் வெவ்வேறு முன்மொழிவுகளை, எதிர் தரப்பினரிடம் சேர்த்து, அவர்களுடைய கருத்தை மீண்டும் மாற்றுத் தரப்பினரிடம் சேர்த்து, இருதரப்பினர்களுக்கும் குந்தகமில்லாத மொழியில் பேச்சுவார்த்தையை மேலும் கொண்டு சென்று, பல்வேறு வழிகளில் தீர்வுக்கான தடைகளைத் தகர்த்து, பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் கண்டு சமரச முடிவை எட்ட முயற்சி செய்வார்.

## நிலை 4

எட்டப்பட்ட முடிவு சட்டப்படியானதா? தரப்பினர்கள் முழு சம்மதத்துடன் ஒத்துக்கொள்கிறார்கள் எனில், அதை எழுத்து மூலமாக பதிவு செய்யலாமா என்று முடிவு செய்து, அதை எழுத்துப்பூர்வமாக, சரியான வடிவில் எழுதப்பட்டு அது இருதரப்பினர்களாலும் சரியென உறுதி செய்யப்பட்டு, இருதரப்பினரும் கையொப்பமிட்டு அதை செயல்படுத்தக்கூடிய சமரச ஒப்பந்தமாக நீதிமன்றத்திற்கு அனுப்பிவைப்பர்.

### சமரசத்தை யார் நாடலாம்?

வழக்குமுறை முரண்களை முடிவுக்கு கொண்டு வர நினைக்கும் எந்த ஒரு தனி நபரோ, நிறுவனமோ, சங்கமோ அல்லது ஒன்றிணைந்த குழுவோ சமரச மையத்தை நாடலாம்.

- வணிக வழக்குகள்
- நுகர்வோர் வழக்குகள்
- கணவன், மனைவி மற்றும் குடும்ப வழக்குகள்
- பணம் மற்றும் ஒப்பந்தம் சார்ந்த வழக்குகள்
- ஒலிபரப்பு மற்றும் தொலைத்தொடர்பு சார்ந்த வழக்குகள்
- தொழில் மற்றும் பணியிட வழக்குகள்
- காசோலை வழக்குகள்
- வாடகை மற்றும் சொத்து வழக்குகள்
- சில குறிப்பிட்ட குற்றவியல் வழக்குகள்

இவை எல்லாமே சமரசத்திற்கு உகந்தவை தான்.

### சமரசம் எங்கே?

தமிழ்நாடு சமரச மையம், மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மற்றும் மதுரைக் கிளையில் செயல்படுகிறது. மேலும், ஒவ்வொரு மாவட்ட தலைமை நீதிமன்ற வளாகங்களிலும் மற்றும் வட்ட நீதிமன்ற வளாகங்களிலும் சமரச மையங்கள் செயல்படுகின்றன.

### சமரசம் எப்போது? எப்படி?

வழக்கு, நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கும்போது எந்த ஒரு நிலையிலும், அந்த நீதிமன்றம் மூலமாகவோ அல்லது இசைவுத் தீர்வம் மற்றும் தீர்ப்பாயங்களின் மூலமும் வழக்கை சமரச மையத்திற்கு அனுப்பக் கோரலாம். இது மட்டுமில்லாது தரப்பினர்கள் விருப்பப்பட்டால், எந்தவொரு சமரசமையத்திற்கும் குறிப்பிட்ட ஒரு தனிநபரின் வழக்கை அனுப்பி வைக்கக் கோரலாம்.

# MEDIATION AWARENESS

## WHAT IS MEDIATION AND ITS PURPOSE

Mediation is a voluntary, party-centric, negotiation process where a neutral, third person, known as a 'Mediator', assists the parties in resolving their disputes using specialised communication and negotiation methods. The parties themselves decide if they want to settle and the terms of settlement; the decision is not of the mediator. Once the terms of settlement are agreed and signed by the parties and mediator, they are binding & enforceable like a Court Order. Mediation is not bound by rules of evidence or procedure. The discussions are confidential, without prejudice and cannot be used in courts.

The parties can always go back to Courts or Arbitrator if there is no settlement in Mediation.

## WHY CHOOSE MEDIATION?

- Fast, easy & efficient resolution of disputes, within a fixed timeline
- Cost effective compared to court or arbitration
- Flexible and informal as not bound by rules of evidence or procedure
- Confidentiality of discussions in mediation
- Improves and mends on-going relationships
- Can be held virtually or physically
- Opportunity to negotiate agreed terms
- Offers discussed are without prejudice
- Voluntary settlement by parties
- Option of going back to Court or for arbitration if mediation does not result in settlement
- Settlement before a Mediator is binding and enforceable in law like a Decree/Award.
- Avoids litigation stress and is win-win for all.
- It is supported by Courts and Judges

## STEP-WISE PROCESS OF MEDIATION

**Step 1**

At the request of parties, Court can refer the matter for Mediation. The mediator meets all the parties to the disputes in a joint, opening session and explains the process of mediation, including its voluntary & confidential nature, that the terms of agreement cannot be imposed upon parties by him, but once terms are agreed and signed, it is legally binding upon parties. The parties share in brief their perceived reason for the disputes.

### Step 2

The mediator thereafter usually sits in single session with each party to avoid direct conflict. Mediator actively listens in detail to understand the underlying interests and concerns of parties and explore options for settlement. Separate single session is also a face-saving mechanism as offers are not made directly so can be altered by the party.

### Step 3

Mediator conveys the perspectives and offer of one party to the other, rephrases any harsh words, guides parties to develop fresh options keeping both the parties' interests in mind and avoids a stalemate.

### Step 4

When an oral agreement is reached between parties to their satisfaction & in accordance with law, the Mediator put in the settlement in writing & it is signed by the parties and mediator so it is legally binding and enforceable.

## Who can go for Mediation

Any person, company or group seeking to avoid or end disputes/possible disputes relating but not limited to:

- Commercial disputes
- Consumer disputes.
- Matrimonial or family conflicts
- Contract works and payments
- Broadcasting & Telecom disputes
- Employment, or workplace disputes
- Cheque return
- Tenancy or property disputes
- Certain criminal disputes etc.

## Where, when & How to go for Mediation

### Where

Tamil Nadu Mediation and Conciliation Centre, High Court, Madras, Tamil Nadu Mediation and Conciliation Centre, Madurai Bench of Madras High Court, Madurai, District Mediation Centres and Taluk Mediation Sub-Centres (throughout the State of Tamil Nadu) and Union Territory of Pudhucherry annexed to the Court or Mediator, as directed by the Court.

### When & How

During pendency of litigation – Parties in litigation before a Court or an Arbitrator can, at any stage, agree to go for mediation and request the Court to send matter for mediation to the court annexed mediation centre or a reputed mediator.